# திருமுறையும் சைவத்திருநெறியும்

திருவிசைப்பா । திருப்பல்லாண்டு । திருமந்திரம்

செவ்விதாக்கம்

**க.இரகுபரன்**

**கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்**

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**இந்துமத அலுவல்கள் அமைச்சு**

**திருமுறையும் சைவத்திருநெறியும்**

(திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம்)

பதிப்பாசிரியர்கள்:திரு. க. இரகுபரன், கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

பதிப்பு: மார்ச் 2016

வெளியீடு:இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

அச்சுப் பதிப்பு:குமரன் அச்சகம்

விலை: ரூபா 700 /=

**Thirumuraiyum Saiva Thirunerium**

Editor:Mr. K. Raguparan & Dr. S. Prashanthan

Edition: March 2016

Published:Dept. Hindu Religious and Cultural Affairs

Printed by:Kumaran Press (Pvt) Ltd

Price: Rs. 700 /=

ISBN: 978-955-9233-41-1

# திருமந்திரத்தில் வடமொழி செல்வாக்கு

ச.பத்மநாபன்

திருமந்திரம் என்பது உயர்ந்த மறைபொருளை உள்ளடக்கிய உயரிய சாஸ்திரம் ஆகும். இதன் ஆசிரியர் திருமூலர். இது பத்தாம் திருமுறையாக இடம்பெறும் தோத்திரமாகவும் அமைகின்றது. இத் திருமந்திரம் எனும் பதம் திரு எனும் அடைமொழியைக் கொண்டு மந்திரம் எனும் பதத்தைக் கொண்டு விளங்குகின்றது. வடமொழி என்பது சிறப்பாக சம்ஸ்கிருத மொழியையே பிரதி நிதித்துவப்படுத்தும் சொல்லாக இங்கு கையாளப்படுகின்றது. அதன்வழி திருமந்திரம் கூறும் செய்தியாகிய சிவாகமங்களின் சாரம் எவ்வாறு இடம்பெறுகின்றது என்றும், அதனை அறிந்து கொள்ள எவ்வளவு தூரம் வடமொழிப் புலமை வேண்டும் என்பதனையும், வடமொழியின் மூலமரபு எவ்வாறு சாரப்படுத்தப்பட்டுள்ளது என்பதனையும் அறிந்து கொள்ள வழியாக அமைவதே இக்கட்டுரை.

## திருமந்திரம்

இது தமிழ் மூவாயிரம்[1] என்று அழைக்கப்படும். இதில் 'மந்திரம்' எனும் பதமே வடமொழிப்பதமாகும். சிவாகமங்களில் மந்திரோத்தார விதிபடலம்[2] சிறப்பாகக் கூறுகின்றது. 'நினைப்பவனைக் காப்பது மந்திரம்' எனப்பொருள் கொள்ளப் படுகின்றது[3] உயர்ந்த சிந்தனையில் மனதுட் கண்ட காட்சியே மந்திரம் எனவும் கொள்ளப்படுகின்றது. இதனை 'ரிஷி' எனும் பதம் உணர்த் துகின்றது.[4]

சிவாகமங்களின் மந்திரோத்தாரவிதி படலம் ஒவ்வொரு எழுத்தும் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதனைக் கூறிநிற்கும் தன்மையன.[5]

*நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளந்த*
*நிறைமொழியாக மறைமொழி தானே மந்திரம் என்ப* [6]

என்பார் தொல்காப்பியர். இந்நிலையில் மறைமொழியை மந்திரம் என தமிழ் இலக்கியமரபு கூறுகின்றது. சிவாகமங்கள் இருபதெட்டில் காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், சுப்பிரபேதம், மகுடம் எனும் ஏழு மூலசிவாகமங்களதும் வேறு இரு ஆகமங்களான இயாமள தந்திரம், காலோத்தர ஆகமம் என்பனவற்றின் சாரமாக அமைந்தமை பற்றிய மரபு காணப் படுகின்றது[7]. எனினும் திருமந்திரம் தனித் தமிழில் அமைந்த தன்மையானது என்றும், தமிழில் தோன்றிய சாத்திரநூல் என்றும், தமிழ் ஆகமம் என்றும் கொள்ளும் மரபுகள் காணப்படுகின்றன. இதன்வழி திருமந்திரம் தமிழில் சாத்திரமாகவும் தோத்திரமாகவும், தத்துவமாகவும் அமைந்த நூல் என்பது முடிந்த முடிவாகின்றது.

## சிவாகமும் திருமந்திரமும்

சிவாகமங்கள் தந்திரங்கள்[8] என்று அழைக்கப்படும் தன்மையன. பின்பற்றுபவனைக் காப்பது தந்திரம்[9] எனும் பெயர் சிவாகமங்களில் விரிவுத்தன்மைக்கு ஏற்ப மஹாதந்திரம் என்றும் அழைக்கும் மரபு காணப் படுகின்றது.[10] இதற்குமேலாக சிவாகமங்களின் தோற்றுவாய்

பற்றிக் கூறும் மரபிற்கும் சிவாகமங்கள் தந்திராவ தாரப்படலம் என்றே கூறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்நிலையில்,

*பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்*
*உற்ற நல் வீரம் உயர்வாதுளம் சிந்தியம்*
*மற்றங் வியாமள மாகுங்காலோத்தரந்*
*துற்றநற் சுப்பிரஞ் சொல்ல மகுடமே. (63)*

எனும் பாடல் தெளிவுபடுத்தும்.

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இம்மரபில் காமிகம், காரணம், அஜிதம், ரௌரவம், மகுடம், சுப்ரபேதம் முதலான ஆகமங்களின் தந்திராவதாரவிதிபடலம் மிகவிரிவாக அமைந்து விளங்கு வதனையும் அதன் சாரத்தையே,

*அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்*
*அஞ்சென டிருபத்து மூன்றுள ஆகமம்*
*அஞ்சலி கூப்பி அறுபத்து தறுவரும்*
*அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே. (57)*

எனக் கூறிநிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயமே ஆகமசாரம் என்பதனை உணர்த்துவதற்கு ஏற்ற உதாரணமாகும்.

குருமரபில் சிவாகமங்களை தாம் பெற்றதாக திருமூலர் குறிப்பிடுகின்றார்.[12]

## திருமந்திரமும் சைவசித்தாந்தமும்

சிவாகமங்களின் சாரமே திருமந்திரம் எனக் கூறப்பட்டது. எனினும், சிவாகமங்களின் வழியே சிவாகமங்களின் ஞானபாதம் சைவசித்தாந்த உண்மை களைப் பேசுகின்றது. சைவசித்தாந்தம் ஒரு சமயதத்துவமாகிய தன்மை அதனது பரிணாமத்தன்மையின் தனித்துவமாக மிளிர்கின்றது. சைவ சித்தாந்தம் எனும் சமயதத்துவத்தை திருக்கோவில், சைவ வாழ்வியல், சமயம்,

வழிபாடு, கிரியை, யோகம், ஞானம் எனும் அனைத்து அம்சங்களிலும் காணத்தகும் தன்மையாகின்றது.

சைவசித்தாந்தம் என்னும் பதத்தினை சைவம் + சித்தாந்தம் என இணைத்துக் கொண்ட மரபை முதன்முதலில் காமிகாகாமத்தில் காணமுடிகின்றது. [13]

சித்தாந்தம் எனும் பதம் அஷ்டபிரகாரண நூல்களில் நன்கு விளக்கப்படுகின்றது.[14] இம்மரபிலிருந்து நோக்குகையில் திருமந்திரம்,

*கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்*
*முற்பத ஞான முறைமுறை நண்ணியே*
*சொற்பத மேவித் துரிசற்று மேலான*
*தற்பரங் கண்டுளோர் சைவசித்தாந்தரே (1421)*

என 'சைவசித்தாந்தம்' எனும் பதத்தினை பயன்படுத்துகின்றமை மனங் கொள்ளத்தக்கது.

### திருமந்திரத்தில் வடமொழிச் செல்வாக்கு

திருமூலர்,

*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே*[18]

என நல்ல தமிழில் இந்துப்பண்பாடு சார்ந்தும், சிறப்பாக சிவாகமம் சாந்தது மான பண்பாட்டுச் சொல்மரபுகளை கையாள்வது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இந்நூல் சாஸ்திரம் எனும் உயர்வு பெறுகின்றது.

*"சர்வஸ்ய லோசனம் சாஸ்திரம்'*

**'அனைத்துவிடயங்களுக்கும் கண்ணாக அமைவது சாஸ்திரம்'** ஆகும்.

சிவாகமமரபு, குருமரபு, சாஸ்திரமரபு என்றும் மூன்றும் ஒன்றுசேர்ந்த சிறப்பே திருமந்திரத்திற்குரிய தனித்தன்மையாகின்றது.

இவற்றையடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது 'வைதிக சைவநெறி' மரபுகள் நன்கு கையாளப்படுவது மனங்கொள்ளத் தக்கது.[15]

திருமந்திரத்தில் சம்ஸ்கிருதச் சொற்கள் அவ்விதமே கலைச் சொல்மரபில் கையாளப்படுகின்ற அதேவேளை சம்ஸ்கிருத மூலங்களாக அமைந்த சாஸ்திரங்களை தமது நூலின் மூலநூலாகக் கொண்டார். இம்மரபின் அடிப்படையிலேயே திருமந்திரம் ஒன்பது ஆகமங்களின் சாரம் என்பது புலனா கின்றது. இதனடிப்படையில் திரு மந்திரத்தின் ஒன்பது தந்திரங்களிலும் எவ்வாறு சொற் செல்வாக்கினையும், மூல நூற் செல்வாக்கினையும் வடமொழி பெற்றுள்ளது. என்பதனை நோக்குவோம்.

## சைவசமய இலக்கியங்களும் வடமொழியும்

சைவசமயமரபின் மூல ஊற்றுக்கள் வேதங்கள் முதல் பரந்தும் விரிந்தும் காணப்படுகின்றன. அம்மரபில் வேதங்கள் நான்கும், வேதாங்கங்கள் ஆறும், அதைத்தொடர்ந்த தனுர்வேதம், காந்தர்வவேதம், ஆயுர்வேதம் முதலானவையும் தர்மசாஸ்திரங்களும், மற்றும் இதிகாசங்கள், மஹாபுராணங்கள், சிவாகமங்கள், உபாகமங்கள், தந்திரங்கள், கிரியை நூல்கள், தத்துவ நூல்கள், சைவசித்தாந்த நூல்கள் என பல்வேறுபட்ட உரைகளுடன் வடமொழி மூலமாக மிகவிரிந்ததோர் சாஸ்திரமரபும் சிந்தனைமரபும் காணப்படுகின்றது. இம்மரபுகளின் தொடர்ச்சியினையும் பல்வேறுவிதமான சொற்பிரயோகங்களின் விளக்கங்களையும் கண்டு நோக்குவதே பொருத்தமாக அமையும். இந்நிலையிலேயே பல்வேறுபட்ட கலைச்சொற் பயன்பாடு காணப்படுகின்றது. அவற்றினை புரிந்துகொள்வதற்கு சம்ஸ்கிருத மொழியறிவும், சாஸ்திரங்களின் புலமையும் அவசியமாகின்றது. இவற்றினைத் துணைக் கொண்டு திருமந்திரம் வடமொழிச் செல்வாக்கினை மேலோட்டமாக ஒவ்வோர் தந்திரங்களிலும் எவ்வாறு சொல்மரபிலும், மூலநூல் மரபிலும் பெற்றுள்ளது என்பதனை நோக்குவோம்.

**பாயிரம்**

திருமந்திரத்தில் பாயிரம் எனும் பகுதி,

1. கடவுள் வாழ்த்து (50),
2. வேதசிறப்பு (06),
3. ஆகமச்சிறப்பு(10),
4. குருபாரம்பரியம் (06),
5. திருமூலர் வரலாறு (22),
6. அவையடக்கம் (04),
7. திருமந்திரத்தொகைச்சிறப்பு (02),
8. குருமட வரலாறு (02),
9. திருமூர்த்திகளின் சேட்டகனிட்ட முறைமை (10)

என 112 பாடல்கள் கொண்டதாக விளங்குகின்றது.

இப்பகுதியில் கடவுள் வாழ்த்தாக விளங்கும் சிவபரம் பொருள் அஷ்டமூர்த்தி வடிவினனாவான். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், எசமானன் எனும் எட்டுவடிவினனாவான். இவ்வடிவத்தின் விரிவினை சிவாகமங்கள் சிறப்பாக எடுத்தோதுகின்றன. இவ்வடிவத்தின் பெருமையையே மகாகவி காளிதாசர் தனது அபிஞ்ஞான சாகுந்தலத்தின் முதற்பாடலில் சுட்டுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.[16]

ஆகமச்சிறப்பு எனும் பகுதியில் உபதேசச் சிறப்பும், செவிவழி உபதேசமாக குருமரபும், சந்தானமும் போற்றப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. சிவாகமங்கள் சிவாகம உபதேசமரபில் ‘சம்பந்தம்’ தனித்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

*அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்*
*அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்*
*அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்*
*அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.* [16]

என்பதன் விரிவு சிவாகமங்களின் தந்திர அவதார படலங்களில் விரிவுபடக் கூறப்படுகின்றன. இவற்றினை சிறப்பாக காரணம், ரெளவம் ஆகிய ஆகமங்களில் தந்திராவதார படலத்தில் விரிவுபடக் காணமுடிகின்றது. இவ்விரிவில் சிவாகமங்களின் தோற்றம், சதாசிவ மூர்த்தியில் அணிகலன், கேட்டவர்கள், உபாகமங்கள் எனும் விரிவுகள் ரெளரவாகமத்தில் நிறைவாகவும் விரிவாகவும் இடம்பெறுவது குறிப்பிடத் தக்கது.[17]

திருமந்திரத்தில் இடம் பெறும் மூலசிவாக மங்களாக காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், சுப்ரபேதம், மகுமடம் எனும் ஏழும், சாக்தந்திரமான ருத்ரயாமள தந்திரமும், தொகுப்பு நூலான காலோத்தரமும் மூலமாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இதன் வழி நோக்குகையில் முறையே

| | |
|---|---|
| காரணாகமம் | 1ம் தந்திரம் |
| காமிக ஆகமம் | 2ம் தந்திரம் |
| வீர ஆகமம் | 3ம் தந்திரம் |
| சிந்திய ஆகமம் | 4ம் தந்திரம் |
| வாதுள ஆகமம் | 5ம் தந்திரம் |
| ருத்ரயாமளம் தந்திரம் | 6ம் தந்திரம் |
| காலோத்தர ஆகமம் | 7ம் தந்திரம் |
| சுப்பிரபேத ஆகமம் | 8ம் தந்திரம் |
| மகுட ஆகமம் | 9ம் தந்திரம் |

என இடம்பெறுகின்றன. ஒவ்வொரு பகுதியும் தந்திரம் என்றே அழைக்கப்படுகிறது. சிவாகமங்களைப் போன்றே இவையும் தந்திரம் என அழைக்கப்படும் உட்பிரிவு காணப்படுவது சிவாகமச் செல்வாக்கு எனலாம்.

குருபாரம்பரியத்தில் நந்தி எனும் சிறப்புப் பெறுபவர் ஸ்ரீகண்ட ருத்ரர் ஆவார். இவரிடமிருந்து பெற்ற உபதேசத்தின் மேன்மை வேதசிவாகம பேதமின்மையும் சிறப்பும் தனித்துவமாகும். ஸ்ரீகண்டருத்ரர் தமது பிரம்மசூத்திரத்திற்கான சிவாத்வைத சைவபாடியத்தில்,'வேத சிவாகமங்களுக்கு பேதம் காண்கிலோம். வேதங்களே சிவாகமங்கள்' என அவற்றை இறைநூல் எனும் உயர்வுடன் கொள்ளும் மரபு தனித்துவமுடையது.

இம்மரபுகளுக்கு மேலாக சிவாகமங்களில் உபதேசக்கிரமத்தில் காமிகம் முதல் சுப்ரபேதம் வரையாக பத்து (10) சிவாகமங்கள் சிவபேதம் என்றும், விஜயம் முதல் வாதுளம் வரைவாக பதினெட்டு (18) சிவாகமங்கள் ருத்தபேதம் என்றும், கொள்ளப் படுகின்றன. அவற்றுள் சிவபேதமான காரணம், காமிகம், சிந்தியம், சுப்ரபேதம் எனும் நான்கு மூலசிவாகமங்களையும், ருத்ரபேதமான வீரம், வாதுளம், மகுடம் ஆகிய மூன்று மூல சிவாகமங்களையும் திருமந்திரத்தின் மூல நூலாகத் திருமூலர் கொள்ளும் அதேவேளை சாக்த தந்திரத்தில் ருத்ரயாமள தந்திரத்தையும், சிவாகமங்களின் ஞானபாதத்தொகுப்பு நூலான காலோத்தர ஆகமத்தையும் மூலநூலாகக் கொண்டு சிறப்பாக சிவனின் மேன்மையினையும், சைவத்தின் வாழ்வியலையும் சாஸ்திரங்கள் விதித்த வழிமுறையில் விளங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இன்று பதிப்பிக்கப்பட்ட மூல சிவாகமங்களுள் இத்தி மந்திரத்தில் சுட்டப்படுகின்ற காரணம், காமிகம், மகுடம் வாதுளம் ஆகிய நான்கும் சிலபகுதிகளும், சுப்ரபேதம், வீரம் ஆகிய இரண்டும் நான்குபாதங்களுடனும் பதிப்பிக்கப்பட்ட சிவாகமங்கள் ஆகும். சிந்தியம் பதிப்பாக்கப்படாத மூலசிவாகமம் ருத்ரயாமளமும் பதிப்பிக்கப்பட்ட சாக்த தந்திரம் ஆகும். அதேபோல் காலோத்தர ஆகமம் சார்த்த த்ரிசதி காலோத்தரம் எனப்பட்ட ராம கண்டரது விருத்தியுரையுடனும் பதிப்பிக்கபட்ட நூலாகும். இம் மூலாகமங்களின் செய்தி அல்லது சாரம் எவ்விதம் திருமந்திரத்தில் பிரதிபலிக்கின்றது என்பது மிகவும் நுணுகி ஆய்வுசெய்ய வேண்டியது.

### முதலாம் தந்திரம்

முதலாம் தந்திரம் காரணாகமத்தின் சாரம் எனக்கொள்ளப்படுகின்றது. இத்தந்திரத்தில் உபதேசம் (113- 142), யாக்கை நிலையாமை (143 – 167), செல்வம் நிலையாமை(168 – 176), இளமை நிலையாமை (177 – 186), உயிர்நிலையாமை (187 – 196), கொல்லாமை (197 – 198), புலால் மறுத்தல் (199, 200), பிறன்மனை நயவாமை (201 - 208), நல்குரவு (209 – 213), அக்கினிகாரியம்(214 – 223), அந்தணரொழுக்கம் (224 – 237), இராசதோடம் (238-247), வானச்சிறப்பு (248, 249), தானச்சிறப்பு (250), அறஞ்செய்வான் திறம் (251 – 259), அறஞ்செய்யான் திறம் (260 – 269), அன்புடமை(270 – 279), அன்பு செய்வாரை அறிவன் சிவன் (280 – 289 ), கல்வி (290 – 299), கேள்வி கேட்டமைதல் (300 – 309), கல்லாமை (310- 319), நடுவுநிலைமை (320 – 323) கள்ளுண்ணாமை (324 – 336) என இருபத்து நான்கு அதிகாரங்கள் இடம் பெறுகின்றன.

திருமந்திரத்தின் அதிகாரத்தின் பெயர்களே தமிழ் மொழிமரபில் வடமொழியாக்கமாக தற்சமமாகவும், தற்பவமாகவும் பயன்படுத்தும் இயல்பு காணப்படுகின்றது. இவற்றுள் உதாரணமாக வைதிக மொழியை திருமந்திரம் ஆரியமொழி என்றும், சம்ஸ்கிருத மொழியை வடமொழி யென்றும் அழைப்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. இதற்கு உதாரணமாக,

*ஆரியமும் தமிழும் உடனே சொல்லி*[65]
*தமிழ்ச் சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்* [66]

என்பனவற்றில் வைதிக மொழி, ஆரியம் என்றும் சம்ஸ்கிருத மொழி வடசொல் என்றும் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடமொழிச் செல்வாக்கு எனும் நிலையில் அக்கினி காரியம் (214 – 223) எனும் பகுதியை நோக்குவோம். சிவாகமங்களுள்

காரண ஆகமத்தை பிரதிநிதிப்படுத்தும் இத் தந்திரத்தில் அக்னிகார்ய விதி என பூர்வ காரணாகமம் 22ம் படலம் உத்தர காரணாகமம் 20வது படலம் ஆகியவற்றில் விரிவாக குறிப்பிடப் பட்டுள்ளன. இங்கு சிவாக்கினியை எவ்வாறு தோற்றுவிப்பது என்பதற்கான கிரியை விபரங்களும் நியதிகளும் கூறப்படுகின்றன. சிவாக்னியின் வகைகளும் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் முறைமைகளும் கூறப்படுகின்றன. இம்மரபு திருமந்திரம் சொல்லும் பகுதியில் இடம்பெறவில்லை. எனினும் பத்ததிரமரபில் அகவழிபாடாக அமையும் அந்தர்யாகத்தினையே திருமூலர் சுட்டுகின்றார். இதன்வழி சிறப்பாக அகோர சிவாச்சாரியார் கூறும் அந்தர்யாக விதிமுறையின் தன்மைகள் திருமூலரின் திருமந்திரத்தில் அவ்வாறே பிரதிநிதித்துவப்பட தமிழில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். [18]

## இரண்டாம் தந்திரம்

திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரம் காமிக ஆகமத்தின் சாரம் எனக் கொள்ளப்படுகிறது. இதில் பாடல்கள் 337-548 வரையாக அமைந்து காணப்படுகின்றன. அவற்றின் வழிநோக்குகையில், அகத்தியம் (337 – 338), பதிவலியில் வீரட்டம் எட்டு (339-346), இலிங்கபுராணம் (347 – 352), தக்கன் வேள்வி (353 – 361), பிரளயம் (362 – 366), சக்கரப்பேறு (367 – 371), அடிமுடிதேடல் (372 – 380), சர்வ சிருஷ்டி (381 – 410), திதி (411 – 430), திரோபவம் (431 – 440), அநுக்கிரகம் (441 – 450), கர்ப்பக்கிரியை (451 – 491), மூவகைச் சீவவர்க்கம் (492 – 500), பாத்திரம் (501- 504), அபாத்திரம் (505 – 508), தீர்த்தம் (509- 514), திருக்கோயிலிழிவு (515 – 519), அதோமுகதர்சனம் (520 – 525), சிவநிந்தை (526 – 529), குருநிந்தை (530 – 536), மயேசுரநிந்தை (537 – 538), பொறையுடைமை ( 539 – 542), பெரியாரைத்துணைக் கோடல் (543 – 548) என பகுக்கப்பட்டுள்ளன.

இத்தலையங்கங்களில் பெரும்பாலானவை சம்ஸ்கிருத மொழியிலேயே இடம்பெறுகின்றமை மனங்கொள்ளத்தக்கது. வடமொழி மூலநூற் செல்வாக்கில் இன்று கிடைத்த காமிக ஆகமம் கிரியாபாதம் மாத்திரம் காணப்படுகின்றமையும் மனம் கொள்ளத்தக்கது. வடமொழி மூலநூற் செல்வாக்கில் ஒரு உதாரணமாக பதிவலியில் வீரட்டம் எட்டு என்பதனை நோக்கலாம். சிவனது திருவுருவங்கள் சிவாகமங்களில் மூர்த்திலக்ஷங்களாக விபரிகப்படுகின்றன. இம்மூர்த்திகளின் வடிவங்களுக்குரிய தெய்வீகவியல் வரலாறுகளை புராணங்கள் கூறிநிற்கின்றன. இம்மரபில் சிவனது அட்ட வீரட்டச் செயல்கள் தென்னிந்தியாவிற்கேயுரிய தனித்துவமான சிறப்புடையன. இதற்கு ஏற்ற தலமகிமைகளும் தென்னிந்தியாவிற்கே உரியனவாக விளங்குவது இங்கு மனங்கொள்ளத்தக்கது.[19]

## மூன்றாம் தந்திரம்

திருமந்திரத்தின் மூன்றாம் தந்திரம் வீர ஆகமத்தின் சாரம் என்றே அழைக்கப்படும் மரபுடையது. இத்தந்திரத்தில் 549 – 883 வரையான பாடல்கள் இடம்பெறுகின்றன. இதன் வழி அதன் விரிவை நோக்குகையில், அட்டாங்கயோகம் (549 –´ 552), இயமம் (553 – 554), நியமம் (555-557), ஆசனம் (558 – 563), பிராணாயாமம் (564 – 577), பிரத்தியாகாரம் (578 – 587), தாரணை (588 – 597), தியானம் (598 – 617), சமாதி (618 – 631), அட்டாங்கயோகப் பேறு (632 – 639),அட்டமாசித்தி (640 – 711),கலை நிலை (712 – 723), சரீரசித்தி உபாயம் (724 – 739),காலசக்கரம் (740 – 769), ஆயுள் பரீட்சை (770 – 789), வாரசரம் (790 – 796), வார சூலம் (797- 798), கேசரியோகம் (799- 824 ), பரியங்க யோகம் (825 – 844), அமுரிதாரணை ( 845 – 850), சந்திரயோகம் (851 – 883) எனப்பகுக்கப்பட்டுள்ளன. இங்கு யோகத்தின் மேன்மை நன்கு பேசப்படுகின்றன. சிவாகமங்களுள் யோகம் பற்றிப் பேசும் நிலையில் மகுடாகமமே அஷ்டாங்க யோகம் பற்றிப்பேசும்

மூலசிவாகமாகும்.[20] அதனை அடியொற்றி இத் திருமந்திரத்தில் அஷ்டாங்கயோக முறைமை கூறப்பட்டுள்ளமையும் அதே பாகுபாடும் சொற்பயன்பாடும் இடம் பெறுகின்றமை வடமொழிச் செல்வாக்கினைப் பிரதிபலிப்பாக அமைகிறது.

## நான்காம் தந்திரம்

திருமந்திரத்தின் நான்காம் தந்திரம் சிந்திய ஆகமத்தின்சாரம் என்பர். இத்தந்திரத்தில் 884- 1418 வரையான பாடல்கள் இடம் பெறுகின்றன. இத்தந்திரத்தின் உட்பொருளை நோக்குகையில், அசபை (884 – 913), திருவம்பலச் சக்கரம் (914 – 1002), அருச்சனை (1003-1021), நவகுண்டதம் (1022-1044), சக்திபேதம் - திரிபுரை சக்கரம் ( 1045 – 1074), வயிரவி மந்திரம் (1075 – 1124), பூரண சத்தி (1125 – 1154), ஆதாரவாதேயம்( 1155-1254), ஏரொளிச்சக்கரம் (1255-1290),வயிரவச் சக்கரம் (1291 – 1306), புவனாபதி சக்கரம் (1307 – 1318), நவாக்கரி சக்கரம் (1319 – 1418) என்னும் பொருளடக்கங்கள் காணப்படுகின்றன. இத்தந்திரத்தின் தலையங்களிற் பெரும்பாலானவை சம்ஸ்கிருத மொழிமூலமுடையவனவும், சிறப்பாக சிவாகம மற்றும் சாக்த தந்திரப்பயன் பாட்டிற்குரியனவுமான சொற்பிரயோகங்களு மேயாகும். இத்தந்திரத்தில் வடமொழி மூலநூற் செல்வாக்கில் புவனாபதிக் சக்கரம் எனும்பகுதியின் முதலாவது பாடல்;

*ககராதி யோரைந்துங் காணிய பொன்மை*
*அகாராதி யோரா றரத்தமே போலும்*
*சகாதி யோர்நன்குந் தான் சுத்த வெண்மை*
*ககாராதி மூவித்தை காமிய முத்தியே.* [21]

எனக்கூறுகின்றது. இப்பாடலின் தெளிவில் ககர,ஹகர, ஸகர எனும் மூவெழுத்துக்களுள்ளும் ஹகாரம் தவிர்ந்த ஏனைய எழுத்துக்கள் தமிழ்வழக்கில் பேசப்படுகின்றன. இப்பாடலில் ஸ்ரீவித்தியா மூலமந்திரமான ‘பஞ்சதசாக்ஷரீ மந்திரம்’

பேசப்படுகின்றது. காதிவித்யா, ஹாதிவித்யா, ஸாதிவித்யா எனும் மூன்று வித்தைகளே இடம் பெறுகின்றன. இக்கருத்தின் தெளிவினை ஆதிசங்கரர் தமது சௌந்தர்ய லக்ஷரீயில் தெளிவுபடக் கூறியுள்ளார். இதற்கு லஹமீரரின் உரை தனித்துவம் மிக்க விளக்கம் அளிப்பதாக அமைகின்றது.[22]

### ஐந்தாம் தந்திரம்

திருமந்திரத்தின் ஐந்தாம் தந்திரம் வாதுளாகமத்தின் சாரம் என்பர். இத்தந்திரத்தில் 1419 – 1572 வரையான பாடல்கள் இடம்பெறுகின்றன. இத்தந்திரத்தின் உட்பொருளை நோக்குகையில், சுத்தசைவம் (1419- 1422), அசுத்தசைவம் (1423 – 1426), மார்க்கசைவம் (1427 – 1437), கடுஞ்சுத்த சைவம் (1438 – 1442), சரியை (1443 – 1450), கிரியை (1451 - 1456), யோகம் (1457-1466), ஞானம் (1467 – 1476), சன்மார்க்கம் (1477- 1487), சகமார்க்கம் (1488 – 1494), சற்புத்திரமார்க்கம் (1495 – 1501), தாசமார்க்கம் (1502- 1506), சாலோகம் (1507, 1508) சாமீபம் (1509), சாரூபம் (1510, 1511), சாயுச்சியம் (1512, 1513 ), சத்திநிபாதம் -மந்தம் (1514 – 1517), சத்திநிபாதம் - மந்ததரம் (1518-1522), சத்திநிபாதம் - தீவிரம் (1523-1526), சத்திநிபாதம் - தீவிரதரம் (1527 – 1529), புறச்சமய தூஷணம் (1530 – 1549), நிராகாரம் (1550 – 1556), உட்சமயம் (1556 – 1572), என்றவாறாக பொருளடக்கம் காணப்படுகின்றது.

இத்தந்திரத்தில் சைவசமயத்தின் உட்பிரிவுகள் கூறப்படுகின்றன. சைவசித்தாந்த தத்துவமரபில் மோக்ஷத்துக்கு காரணமான வழிகள் மார்க்கங்கள் எனக்கூறப்படுகின்றன. அவ்வகையில் சரியை, கிரியை, யோகம், ஞானம், எனும் நான்கு பாதங்களும் அவற்றினூடாக அடையத்தக்க மார்க்கங்களான தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பனவும் இவற்றினூடாக அடையப்பெறும் முத்திகளான சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பனவும் கூறப்படுகின்றன. இங்கு பசு,

பதியாம் தன்மையடைந்து - சிவமாம் தன்மையடைந்து – சிவானந்தமடையும் தன்மை தெளிவு படக் கூறப்படுகின்றது. அதனை,

*சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது*
*சைவஞ் தனையறிந் தேசிவஞ் சாருதல்*
*சைவஞ் சிவந்தனைச் சாராமல் நீங்குதல்*
*சைவஞ் சிவானந்தஞ் சாயுச்சியமே. (1512)*

என்று தெளிவுப்படுத்தும் தன்மை சிறப்புடையது. மேலும், இறைவன் திருவருள் பெறும் தன்மையாகிய சத்திநிபாதம் என்பது மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகையாக விளங்கப்படுத்தப்படுவது சிறப்புடைய தாகும். இந்நிலை சைவசித்தாந்த தத்துவத்தில் மிக உயரிய தன்மை தெளிவு படுகின்றனமை குறிப்பிடத்தக்கது.

**ஆறாவது தந்திரம்**

திருமந்திரத்தின் ஆறாம் தந்திரம் வியாமள ஆகமத்தின் சாரம் என்பர். இங்கு ருத்ரயாமளம் எனும் தந்திரத்தின் பெயரே வியாமள ஆகமம் என சுட்டப்பெறுகின்றது. இத்தந்திரத்தில் 1573 – 1703 வரையான பாடல்கள் இடம் பெறுகின்றன. இத்தந்திரத்தின் உட் பொருளாக சிவகுரு தரிசனம் (1573-1589), திருவடிப்பேறு (1590 – 1604), ஞாத்ருஞானஞேயம் (1605 – 1613),துறவு (1614 – 1623), தவம் (1624 – 1632), தவதூடணம் (1633 – 1644), அருளுடைமையின் ஞானம் வருதல் (1645- 1654), அவவேடம் (1655 – 1660), தவவேடம் (1661-1664), திருநீறு (1665 – 1667), ஞானவேடம் (1668- 1675), சிவவேடம் (1676 – 1679), அபக்குவன் (1680 – 1689), பக்குவன் (1690 – 1703) என்றவராக பொருடளக்கம் காணப்படுகின்றது.

இத்தந்திரத்தில் பக்வன், அபக்வன், ஞானஞாத்ருஞேயம் முதலான சொற்பயன்பாடுகள் வடசொற்செல்வாக்காக அமைந்து காணப்படுகின்றன. விபூதி எனும் திருநீற்றின் மகிமை (1665 – 1667) விபரிக்கப்படுவதில் சிவவடிவத்தில் கங்காள மூர்த்தியின் மேல் பூசிய மேன்மை விபரிக்கப்படுகின்றது. அதனையே,

*கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை*
*மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி*
*சிங்கார மான திருவடி சேர்வரே (1666)*

இப்பாடலில் கங்காளன் எனும் சிவடிவம் சிவாகமங்களில் மிக அழகாகச் சித்தரிக்கப்படுவது மனங் கொள்ளத் தக்கது.[23]

## ஏழாந்தந்திரம்

திருமந்திரத்தின் ஏழாந்தந்திரம் காலோத்தர ஆகமத்தின் சாரம் என்பர். இத்தந்திரத்தில் 1704 - 2121 வரையான பாடல்கள் இடம்பெறகின்றன. இத்தந்திரத்தின் உட்பொருளாக ஆறாதாரம் (1704 – 1711), அண்ட லிங்கம் (1712 - 1725), பிண்டலிங்கம் (1726 - 1729), சதாசிவலிங்கம் (1730 – 1752), ஆத்மலிங்கம் (1753 – 1762), ஞானலிங்கம் (1763 - 1772), சிவலிங்கம் (1773 - 1777), சம்பிரதாயம் (1778 – 1791), திருவருள் வைப்பு (1792 - 1813), அருளொளி (1814 – 1822), சிவபூசை (1823 – 1846), குருபூசை (1847 – 1856), மகேசுவரபூசை (1857 – 1867) அடியார் பெருமை (1868 – 1883), போசனவிதி (1884 – 1885) பிட்சாவிதி (1886 – 1891), முத்திரை பேதம் (1892 - 1901), பூரணக்குகை நெறிச் சமாதி (1902 – 1909), சமாதிக்கிரியை (1910 – 1929), விந்துற்பனம் (1930 – 1936), விந்துஜயம் - போக சரவோட்டம் (1937- 1974), ஆதித்தநிலை அண்டா தித்தன் (1988 - 1992), ஞானாதித்தன் (1993 - 2000, சிவாதித்தன் (2001 – 2004), பசுவிலக்கணம் - பிராணன் (2005, 2006), புருடன் (2007 - 2010), சீவன் (2011 – 2014), பசு (2015 – 2016)

போதன் (2017 – 2030) ஐந்திந்திரியம் அடக்குமுறைமை (2031 – 2043 ), அசற்குரு நெறி (2044 - 2048), சற்குரு நெறி (2049 – 2066), கூடாவெழுக்கம் (2067 -2083), கேடு கண்டிரங்கல் (2084 – 2101), இதோபதேசம் (2102 – 2121) என்றவாறாக பொருடளக்கம் காணப் படுகின்றது.

சிவவடிவங்களுள் அருவுருவத் திருமேனியாக விளங்கும் சிவவடிவம் சிவலிங்கத் திருமேனியாகும்.[24] சிவலிங்க வடிவில் கரந்துறையும் இறைவன் சதாசிவ வடிவமாகும். சதாசிவவடிவத்தின் சூக்ஷ்ம வடிவம் மிகவிரிந்த தன்மையது. இதனை அவ்வடிவத்தின் தியான சுலோகம் கூறிநிற்கின்றது.[25] அத்தகைய சிவவடித்தின் மேன்மையையும், ஆத்மார்த்த சிவபூஜையினையும் திருமந்திரம் விபரித்துக் கூறும் தன்மை ஒப்புநோக்கத்தக்கது.[26] இத்தகைய மரபில் ஓர் ஒப்பு நோக்காக சிவாகம மூலநூற்தன்மை திருமந்திரத்தில் செல்வாக்குப்பெற்று விளங்குவது நோக்கத்தக்கது.

**எட்டாம் தந்திரம்**

திருமந்திரத்தின் எட்டாம் தந்திரம் சுப்பிரபேத ஆகமத்தின் சாரம் என்பர். இத்தந்திரத்தில் 2122 – 2648 வரையான பாடல்கள் இடம்பெறுகின்றன. இத்தந்திரத்தின் உட்பொருளாக, உடலிற்பஞ்சபேதம் (2122 - 2138),உடல் விடல் (2139 - 2141), அவத்தை பேதம் - கீழாலவத்தை (2142 – 2166), மத்திய சாக்கிராவத்தை (2167 - 2183), அத்துவாக்கள் (2184 – 2186), சுத்த நனவாதிபருவம் (2187 - 2226), கேவலசகல சுத்தம் (2227 - 2268), பராவத்தை (2269 - 2295), முக்குண நிர்க்குணம் (2296), அண்டறிபேதம் (2297 – 2298), பதினோராந் தானமும் அவத்தையெனக்காணல் (2299 - 2301), கலவு செலவு (2302 – 2303), நின்மலாவத்தை (2304 - 2354), அறிவு தயம் (2355 – 2369), ஆறந்தம் (2370 – 2404), பதிபசுபாசம் வேறின்மை (2405 – 2434), முக்குற்றம் (2435 – 2436), முப்பதம் (2437 – 2444), முப்பரம் (2445 – 2451), பரலட்சணம் (2452 - 2465), முத்துரியம்

( 2466 - 2473), மும் மூத்தி (2474 – 2477), முச் சொருபம் (2478- 2484), முக்கரணம் (2485 – 2487), முச்சூனிய தொந்தத்தசி (2488 - 2494), முப்பாழ் (2495 – 2500), காரிய காரணவுபாதி (2501- 2505), உபசாந்தம் (2506 - 2511), புறங்கூறாமை (2512 – 2526), அஷ்டதளகமல முக்குண அவத்தை ( 2527 – 2545 ), சுத்தாசுத்தம் ( 2546 - 2557), மோக்ஷ நிந்தை (258 – 2565), இலக்கணாத்திரயம்(2566 - 2567), தத்துவசி வாக்கியம் (2568 - 2586),விசுவக்கிராசம் (2587 – 2594), வாய்மை (2595 – 2609), ஞானி செயல் (610 – 2611), அவாவறுத்தல் (2613 – 2622), பத்தியுடைமை (2623- 2632), (2633-2634), சோதனை (2635 – 2648), எனப் பொருடக்கம் காணப்படுகின்றது.

மூலசிவாகம வரிசையில் பத்தாவ தாகவும், இன்று நான்கு பாதங் களுடனும் கிடைக்கப்பெறும் மூல சிவாகமமாக விளங்குவது சுப்ர பேதாகமம் ஆகும். இவ்வாகமத்தின் ஞானபாதத்தின் மூன்றாவது படலமான அத்வா விதிபடலம்[27] திருமந்திரத்தில் செல்வாக்குப் பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது. உபநிடத மகா வாக்கியங்களுள் ஒன்றான 'தத்வமசி' எனும் மகாவாக்கியத்தின்[28] விளக்கத்தை சைவசித்தாந்த பரமாக விளங்கும் தன்மை திருமந்திரத்துக்கேயுரிய தனித்துவமான மேன்மையாகின்றது. இம்மரபை திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர் சிவயோகசாரத்தில் எடுத்தாளுகின்றமையும் ஒப்பு நோக்கத்தக்கது.

### ஒன்பாதம் தந்திரம்

திருமந்திரத்தின் ஒன்பதாம் தந்திரம் மகுடாகமத்தின் சாரம் என்பர். இத்தந்திரத்தில் 2649-347 வரையாகவும் அதிகபாடலாக 3048 – 3090 வரையும் காணப்படுகின்றன. அவற்றின் உள்ளடங்கலாக, குருமடதரிசனம் (2649 - 265), ஞான குருதரினம் (2656 -2674), பிரணவ சமாதி (2675 - 2650), ஒளி (2681 – 2697), தூலபஞ்சாக்ஷரம் (2698 – 2708), சூக்கும பஞ்சாக்கரம்

(2709 – 2717), அதிசூக்கும பஞ்சாக்கரம் (2718 – 2721), திருக்கடத்தரினம் (2722 – 2803), ஆகாசப் பேறு (2804 – 2812), ஞானோதயம் (2813 – 2824), சத்திய ஞானானந்தம் (2825 – 2834), சொரூப உதயம் (2835 – 2855), சிவசொரூப தரினம் (2856 – 2863), முத்தி பேதம், கருமநிருவாணம் (2864, 2665), சூனியசம்பாஷணை (2866 - 2935), மோளசமாதி (2936 - 2953), வரையுரை மாட்சி (2954 – 2956), அணைந்தோர் தன்மை (2957 – 2981), தோத்திரம் (2982 – 3025), சர்வவியாபி (3026 – 3047), அதிகப்பாடல்கள் (3048 – 3090) என்ற வாறாக உள்ளடக்கம் காணப்படுகிறது.

வேதமந்திரங்களுள் யசுர் வேதத்தைச்சார்ந்த சதருத்ரீயம் சிவனது 100 நாமங்களைப் போற்றும் ஒரு துதியாக அமைகின்றது. அதன் நடுநாயகமாக விளங்குவது கிப பஞ்சா புர மந்திரம். அதனை,'ஓம் நமசிவாய சிவதராய ச' எனக் கூறுகின்றது. இம்மதத்தின் பல்வேறு வடிவங்களையும் திருமந்திரங்கள் கூறுகின்றன. அத்துடன் மகுடாகம விதிமுறைப்படியே சிதம்பரத்தில் பூஜைகள் நடைபெறுவது போன்று இதிலும் தில்லையின் சிறப்பும் நடனச் சிறப்பும் பேசப்படுவது தனித்துவமாக ஒப்பு நோக்க வேண்டிய தன்மையது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**நிறைவுரை**

தென்னிந்தியாவிலேயே சிவாகமமரபு நன்கு பின்பற்றப்படுகின்றது. சைவமரபில் தென்னிந்தியாவில் சிவாகமங்களின் முக்கியத்துவம் ஓர் பண்பாட்டு முக்கியத்துவமாகும். இந்நிலையில் சைவ சித்தாந்தம் ஓர் சமயதத்துவமாக சைவ மக்கள் வாழ்வியலில் நிலைபெற்றது. சைவ வாழ்விற்கும், சைவவாழ்வின் இலட்சியத்திற்குமேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் மார்க்கங்கள் வாழ்வியலோடு ஒன்றிணைந்த தன்மையவாயின. கிரியை மரபுகள் ஞானம் கிடைத்தற்கு நிமித்த காரணமாயின. இம்மரபில் சிவனை யொட்டிய வாழ்வியல்

சிவபோகம், சிவயோகம், சிவஞானம் என்றே கொள்ளும் மரபாயிற்று. சைவமரபில் சிவன் சச்சிதானந்த வடிவமாயிற்று. சிவனின் வடிவமே அன்பேயுருவான தன்மைய தாயிற்று இந்நிலையில் சைவவாழ்வின் சாரமே சைவசித்தாந்த சாரமாக அமைந்ததாயிற்று.

தென்னிந்தியமரபில் தமிழில் சிவாகமங்களையும் அவைகூறும் சிவபோகம், சிவயோகம், சிவஞானம் பற்றியவிடயங்களையும் வாழ்வியலாகக் கூறும் தேவையை உணர்ந்த திருமூலர் சிவஞானத் தெளிவின் உயர்ந்த உன்னத உண்மையை தோத்திரமாகவும், ஆதி சங்கரர் வைதீக தத்துவமரபில் வேதாந்த தத்துவைத்திற்கு விளக்கமளித்தமைக்கு நிகராக சிவாகமசாரமாக சைவ சித்தாந்த மரபில் தெளிவுபடுத்தினார். வடமொழியில் அஷ்டப்பிரகரணங்கள் தோன்றி சிவாகம சாரங்களை தெளிவு படுத்திய வடமொழிச் சைவசித்தாந்த மரபிற்கு நிகராக தமிழில் திருமந்திரம் தெளிவுபடுத்துவத்துவது நன்கு வலியுறுத்தப்படுகின்றது.

தென்னிந்திய சைவமரபு சிவாகம ஞான சாரமாகவும், அத்தைவம் சார் சொன்மரபு சிவாகமங்களின் வழி கலைச்சொல் மரபாகவும், அத்தோடு பல சொற்கள் பண்பாடுகள் சார் மரபிலும் பயன்படுத்தப்படும் தன்மையவாகின்றன. இந்நிலைக்கு வைதிக சைவமரபு அடியூற்றாயிற்று. இவற்றிற்கு நிலைக்களனாக சாஸ்திரம் எனும் உயர்வுடன் வடமொழியின் செல்வாக்கு திருமந்திரத்திற்கு அடித்தளமாயிற்று. இந் நிலையில் புனித நூலாக திருமந்திரம் சிவாகமங்களின் சாரம் என்பதற்கு மேலாக சிவாகமப் பண்பாட்டின் சாரமாக சாத்திரம், தோத்திரம் எனும் இரு நிலை களிலும் புனித நூலாக விளங்குகின்றது.

சிவாகமங்களின் கலைச்சொற்கள் பரிபாஷை என்று கூறப்படுகின்றன. இவற்றின் தெளிவு நிலையில் சிவாகமம்சார் பரிபாஷைக்கும், சைவ சித்தாந்த பரிபாஷைக்குமாக 'சிவாகம பரிபாஷாமஞ்சரி, எனும் நூலும் 'சைவசித்தாந்த பரிபாஷாமஞ்சரி,

எனும் நூலும் விளங்குகின்றன. வடமொழிச் செல்வாக்குடன் திருமந்திரத் தினை விளங்கிக் கொள்வதற்கு அத்தகைய பாரிபாஷைகளின் அறிவு அவசியமாகின்றது.

திருமூலர் சிவாகமங்களின் வழி கி.பி. 7ம் நூற்றாண்டளவில் தமிழ் மரபில் திருமந்திரமாக தெளிவுபடுத்த கி.பி 17ம் நூற்றாண்டில் ஈழத்து சைவசித்தாந்த மரபின் பிதாமகராகவிளங்கும் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சிவயோகம், சிவஞானம் பற்றிய சிந்தனைகளை வடமொழியில் எட்டு நூல்களை எழுதி பதிவு செய்தமை சுட்டிக் காட்டத்தக்கது.

திருமந்திரம் சிவாகமங்களில் ஏழு மூலசிவாகமங்களினது சாரமாகவும், மற்றும் சார்த்தத்ரிசதி காலோத்தரம் எனும் தொகுப்பு நூலினதும், ருத்ரயாமளம் எனும் சாத்தந்திரத்தினதும் சாரமாகவும் விளங்கும் தன்மையில் சிறப்பாக தெய்வீகவியல் வரலாறு கூறும் புராணங்களின் செய்திகளையும் மற்றும் சைவமரபுகளையும் பிரதிபலித்துக் காட்டும் ஓர் சாஸ்திரமாக மிளிருகின்றது.

## அடிக்குறிப்பு

1. திருமந்திரம், 99
2. காரணாகமமம், (பூர்வம்), 2
3. காமிகாகமம், (பூர்வம்),2.2
4. வேதரிஷிக்கவிதைகள் (மஹாகவிபாரதி), முன்னுரை, i - iii
5. காமிகாகமம் (பூர்வம்) 2 மந்திரோத்தார விதிபடலம், 1-186
6. தொல்காப்பியம், பொருள், 179.
7. திருமந்திரம், 63
8. காரணாகமம், (பூர்வம் ) I. 1-5)
9. சுப்ரபேதாகமம், தந்திராவதாரபடலம், 2
10. கிரணாகம மஹாதந்திரம் I-13
11. ரௌரவாகமம், சிவாகம அட்டவணை
12. திருமந்திரம், 62
13. காமிகாகம், (பூர்வம்), I. 119
14. அஷ்டபிரகரணம், ரத்கத்ரயபரீக்ஷ, II
15. பண்டிதமணி, சி.கணபதிப்பிள்ளை, அத்வைதசிந்தனைகள், பக், 29 - 31

16. வடமொழி இலக்கிய வரலாறு (வைதிக இலக்கியம்), பக் 19, 20
17. அபிஞ்ஞான சாகுந்தலம் I.1
18. 1. மகுடாகமம், (பூர்வபாகம்), தந்திராவதாரபடலம்
2. காரணாகமம், தந்திராவதாரபடலம்
19. பரார்த்த நித்தியபூஜாவிதி. பக். 28
20. நோக்குக 'தென்னாட்டின் சைவக்கருவூலம் பதிணென் புராணங்கள்',
21. மகுடாகமம் (1979) (பூர்வம்) யோகலக்ஷணவிதிபடலம் பக் 181-183
22. திருமந்திரம், 1307
23. சௌந்தர்யலஹரி, பக்., 177 -176
24. காரணாகமம் (பூர்வம்), 11, 303 - 310
25. காரணாகமம் (பூர்வம்) 11, 02
26. சதாசிவதியானம் (பரார்த்த நித்தியபூஜை விதி பக் 58-59
27. 1. பரார்த்தத்த நித்தயபுஜாவிதி, ஆத்மர்த்த பூஜை பக்.28
2. திருமந்திரம் (1823 – 1846).
28. சுப்ரபேதாகமம், ஞானபாதம் 3
29. சாந்தோக்கிய உபநிடதம்

## உசாத்துணை நூல்கள்

### 01. மூலநூல்கள்

### 1) வடமொழி மூலநூல்கள்

1. **காரணாகமம்** :- (1921), பூர்வபாகம், 1ம் பாகம், மயிலை அழகப்பமுதலியார் (பதி.),
சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை.
(கிரந்தவிபி)
2. (1927), உத்தரபாகம், 2ம் பாகம், மயிலை அழகப்பதலியார் (பதி.),சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை.
(கிரந்தலிபி)
3. **காமிகாகமம்:** 1978) (பூர்வபாகம்), ஸ்ரீ சுவாமி நாத சிவாச்சாரியார் (பதி) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை. (தேவநாகரி)
4. (1988), (உத்தரபாகம்), ஸ்ரீ சுவாமி ஜகநாதசிவாச்சாரியார் (பதி),
தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை. (தேவநாகரி)
5. **வீராகமம்** (N.D), The orcentel research Institute University of masor (தேவநாகரி)
Disital library)
6. **வாதுளாகமம்** (1921), மயிலை அழகப்பமுதலியார் (பதி.), சிவஞானபோத யந்திரயந்திரசாலை, சிந்தாரிப் பேட்டை, சென்னை( கிரந்தலிபி)

7. **சுப்ரபேதாகமம்**:- ((1907), மயிலை அழகப்பமுதலியார் (பதி.), சிவஞானபோத
யந்திரசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை. (கிரந்தரிபி).
8. **மகுடாகமம்** (1977), பூர்வபாகம், சி.சுவாமிநாத சிவாச்சாரியர் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை (கிரந்தலிபி).
9. **ருத்ரயாமளம்** (ND), சரஸ்வதீபதிப்பகம், கல்கத்தா, (தேவநாகரி)
10. **சார்த்தத்தரிசதி காலோத்தராகமம்**, (1979), பட்டராமகண்டரது உரையுடன், N.R.
Bhatt. (பதி.), பிரெஞ்சு இந்தியவியல்
நிறுவனம், பாண்டிச்சேரி (தேவநாகரி)
11. **சிந்த்யாகமம்** (2006) (கையெழுத்துப்பிரதி), பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம்,
பாண்டிச்சேரி, (Digital library) (தேவநாகரி)
12. **ரௌரவாகமம்** (1961) பாகம் I, N.R. Bhctt (பதி.) பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம், பாணிடிச்சேரி.
13. **அஷ்டபிரகரணம்** (1988), Pt.Sriv rajavalabha Dvivedi (Ed.) யோகதந்தி கிரந்தமாலா – 12, வாரணாசி. (தேவநாகரி)
14. **ஸ்ரீமத்கிரணாகம மஹாதந்திரம்**, (1932) சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம்,
தேவகோட்டை (கிரந்தலிபி)
15. **சிவாகமபரிபாஷாமஞ்ஜரி,** (1988), பிரெஞ்சு இந்தியவியகி நிறுவனம், பாண்டிச்சேரி (தேவநாகரி)
16. **சைவசித்தாந்த பரிபாஷை** (1928), சிவாகமசித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை (கிரந்தலிபி)
17. **அபிக்ஞானசாகுந்தலம்,** (1974)M.R. Kale, (பதி.), மோதிலால் பெனர்சிதாஸ்
லிமிடெட், நியூதில்லி.
18. **சௌந்தர்யலஹரீ,** (1944), ஆதிசங்கரர், தேதியூர் சுப்பிரமணியசாஸ்திரிகள் (பதி.), கிரி பிரஸ், சென்னை

**தமிழ்**

1. **திருமந்திரம்**, (1993), திருமூலர், மௌனாச்சிரமம், கொழும்பு.
2. **திருமந்திரம்** (1957) பாகம், 1,2, திரு இராமநாதபிள்ளை உரையுடன்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம். சென்னை
3. **திருமந்திரம்,** (1933, ம.பாலசுப்பிரமணிய முதலியார் (பதி) சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை.
4. **திருமந்திரம்**, (2003), காசிமடம், திருபனந்தாள் ஆதீனம் வெளியீடு